வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 12.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மணிப்பூரின் வலிமை, அதன் பன்முகத் தன்மை, கலாச்சாரம், பாரம்பரியத்தில் உள்ளார்ந்து இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

தனிநபர் நல்வாழ்வு, மற்றும், ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கு பொறுமையின் முக்கியத்துத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில், கடந்த 2015ஆம் ஆண்டிற்கு பிறகு காசநோய் பாதிப்பு 21 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார்.

சந்திரயான் 4 விண்கலன் வரும் 2027ஆம் ஆண்டுக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்று மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

-------------------------

முர்மு 1(7)

மணிப்பூரின் வலிமை, அதன் பன்முகத் தன்மை, கலாச்சாரம், மொழிகள், மற்றும், பாரம்பரியத்தில் உள்ளார்ந்து இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். மணிப்பூர் மாநிலத்திற்கு நேற்று 2 நாள் பயணமாக சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சேனாபதி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் 6 வெவ்வெறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தும், வேறு பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு......

**(வாய்ஸ்)**

*முர்மு* 2 (19)

**(வாய்ஸ்)**

மணிப்பூர் மாநிலம் சேனாபதி மாவட்டத்தில், குடியரசுத் தலைவர் தொடக்கி வைத்த திட்டங்களில், 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாதிரி தங்கும் வசதியுடன் கூடிய பள்ளி, 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும், 11 கோடி ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள 2 பெய்லி பாலங்கள் உள்ளிட்ட பொது பாதுகாப்பு, சுகாதாரம், மற்றும், பழங்குடியினர் மேம்பாடு போன்றவை அடங்கும். மேலும், சேனாபதி மாவட்டத்தில் நிவாரண முகாம்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த அம்மாநில மக்களையும் குடியரசுத் தலைவர் சந்தித்து கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து, அம்மாவட்டத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய மரம் பழங்குடியினர் இனத் தலைவரையும் அவர் சந்தித்து பேசினார். அதனை தொடர்ந்து நடைபெற்ற விழாவில், பிரமரின் ஜன்மான் திட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய குடியரசுத் தலைவர், பிரதமரின் ஜன்மான் திட்டத்தின் கீழ், பழங்குடி மக்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு முயற்சி தொடக்கப் பட்டுள்ளதாக கூறினார். இத்திட்டம் பழங்குடி மக்களின் கண்ணியம், பாதுகாப்பு, மற்றும், வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் என்றும் தெரிவித்தார். நாட்டின் முன்னேற்றத்தில் பழங்குடியின மக்கள் அதிக அளவில் பங்கேற்பதை உறுதி செய்வதும், அரசின் முன்னுரிமையாக உள்ளது என்றார். மணிப்பூர் மக்களின் விருப்பத்தை மத்திய அரசு

*முர்மு* 3 (5)

அங்கீகரித்துள்ளதாகவும், மாநிலத்தின் அமைதி, மற்றும், வளர்ச்சிக்காக அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார். முன்னதாக 86ஆவது நூபிலால் தினத்தை ஒட்டி, இன்று காலை இம்பாலில் அமைக்கப்பட்டுள்ள நூபிலால் நினைவு வளாகத்தில் மலர் அஞ்சலி செலுத்தினார்.

**------------------------**

மோடி (6)

கோபத்தின் அழிவுகரமான தன்மை குறித்தும், தனிநபர் நல்வாழ்வு, மற்றும், ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கு பொறுமையின் முக்கியத்துவம் குறித்தும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார். தூர்தர்ஷன் தொலைகாட்சியில் ஒலிபரப்பான சமஸ்கிருத ஸ்லோகம் குறித்த வீடியோ ஒன்றை சமூக ஊடகத்தில் பகிர்ந்துள்ள அவர், சமூக நல்லிணக்கம், மற்றும், மனிதகுலத்தின் திறமைகளை சீர்குலைப்பதாக கோபம் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

-------------------------

நட்டா (16)

இந்தியாவில், கடந்த 2015ஆம் ஆண்டிற்கு பிறகு காசநோய் பாதிப்பு 21 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார். மக்களவையில் இன்று, இதுதொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அவர், உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய காசநோய் அறிக்கை 2025-ன் படி, இந்தியாவில் இந்த காலகட்டத்தில் காசநோயால் ஏற்பட்ட இறப்பு விகிதம் 25 சதவிகிதம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார். 2015ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 53 சதவிகிதமாக இருந்த காசநோய் சிகிச்சை மையங்கள், 2024ஆம் ஆண்டு 92 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்றார். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும், தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ், காசநோய் முக்த் பாரத் அபியான் செயல்படுத்தப் பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு, இதுவரை, காசநோயால் பாதிக்கப்பட கூடிய வாய்ப்புள்ள மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், 26.43 லட்சம் நோயாளிகள் கண்டறியப்பட்டதாக திரு. நட்டா தெரிவித்தார். இதில், 9.19 லட்சம் பேர் அறிகுறிகள் அற்ற காசநோயாளிகள் என்றும், அவர் மேலும் கூறினார்.

-------------------------

விமான போக்குவரத்து (16)

குளிர்கால விமானப் போக்குவரத்து சேவையின் தயார் நிலை குறித்து மதிப்பிடுவதற்கான மறு ஆய்வுக் கூட்டம், மத்திய சிவில் விமான

போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தலைமையில் இன்று நடைபெற்றது. இதுகுறித்து சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்திய விமான நிலைய ஆணையம், விமான நிலைய இயக்குனர்கள், விமான நிறுவனங்கள், மற்றும், மத்திய தொழில் துறை பாதுகாப்புப் படைத் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த மறு ஆய்வுக் கூட்டத்தில், அனைவரும் முழுமையாக ஒருங்கிணைந்து பொறுப்புணர்வுடன் செயல்படுவது குறித்தும், மூடுபனியின் போது, விதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடித்து விமானங்கள இயக்குவது உள்ளிட்டவை குறித்தும், அமைச்சர் அறிவுறுத்தியதாக தெரிவித்துள்ளது. மேலும், பாதுகாப்பான, தடையற்ற மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயல்பாடுகளை உறுதி செய்வதற்கும், பயணிகளுக்கு தகவல்களை முன்கூட்டியே தெரிவிக்கும் விதமாகவும், தெளிவான வழிமுறைகளை பின்பற்றுமாறு மத்திய அமைச்சர் இந்த மறு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்.

------------------------

*படகு சுற்றுலா (14)*

படகு சுற்றுலாவிற்கு உகந்த நாடாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்று மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். புதுடெல்லியில், இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடு முழுவதும் உணவகங்கள், மற்றும், தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன், பெரிய ஓட்டல் குழுமங்களும், இத்துறையில் ஆர்வத்துடன் முதலீடு செய்து வருவதாகவும் தெரிவித்தார். வந்தே பாரத் ரயில் சேவை, சுற்றுலாவை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார். கடந்த 11 ஆண்டுகளில், சாலை, ரயில், மற்றும், நீர்வழிப் போக்குவரத்திற்கான கட்டமைப்பு வசதிகள் பெருமளவு மேம்படுத்தப் பட்டுள்ளதாகவும், இதனால், சுற்றுலா தொழில், இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சி அடைந்து இருப்பதாகவும் கூறினார். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவின் பங்கு கணிசமாக அதிகரித்து இருப்பதாகவும், திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

-------------------------

*சந்திரயான்* (12)

சந்திரயான் 4 விண்கலன் வரும் 2027ஆம் ஆண்டுக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்று மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று மாநிலங்களவையில் தெரிவித்தார். இதுதொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், நிலவின் தென் துருவத்தில், துல்லியமாக தரை இறங்கி, மண் மாதிரிகளை சேகரித்து, பூமிக்கு திரும்பும் வகையில் இந்த விண்கலம் வடிவமைக்கப்பட்டு வருவதாக கூறினார். இதற்கான பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். சந்திரயான்-4ஐ தொடர்ந்து, இஸ்ரோ மற்றும் ஜக்சா நிறுவனங்களின் கூட்டு முயற்சியில், சந்திரயான்-5 விண்கலம் செலுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்றார். இந்த விண்கலத்தில், லேண்டர் சாதனைத்தை இஸ்ரோவும், ரோவரை ஜக்சா நிறுவனமும் வடிவமைக்கும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

-------------------------

*ரஜினிகாந்த்* (13)

நடிகர் ரஜினிகாந்தின் 75ஆவது பிறந்தநாளை ஒட்டி, தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ரஜினிகாந்தின் நடிப்பாற்றல், பல தலைமுறையினரை கவர்ந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள அவரது கதாபாத்திரங்கள் முத்திரை பதித்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை மற்றும், பாராளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தமிழ் சினிமாவை கடந்து, உலக அளவில் அரை நூற்றாண்டுகளாக தமது நடிப்புத் திறமையால் அனைவரது மனதையும் கவர்ந்தவர் என்று தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாத கள்ளங் கபடமற்ற நெஞ்சம் கொண்டவர் ரஜினிகாந்த் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

-------------------------

தொழுநோய்-புதுச்சேரி (12)

புதுச்சேரி தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் சார்பில், கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில், தொழுநோய் சிகிச்சை, பராமரிப்பு, மற்றும், விழிப்புணர்வு குறித்த சிறப்புப் பிரிவை, நலவழித் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் இன்று காலை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் உதயசங்கர், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்ட உதவி இயக்குநர் டாக்டர் சிவராமன், மற்றும், மருத்துவர்கள் கலந்து கொண்டனர். வெளிப்புற தோல் சிகிச்சை பிரிவில் தொடங்கப் பட்டுள்ள தொழுநோய் சிகிச்சை சிறப்புப் பிரிவு, வாரத்தில் செவ்வாய், மற்றும், வெள்ளிக் கிழமைகளில் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்ட உதவி இயக்குநர் டாக்டர் சிவராமன் மேலும் கூறுகையில்......

**(வாய்ஸ்-சிவராமன்)**

-------------------------

குறைத் தீர்ப்பு முகாம் (9)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் அறிவுறுத்தலின்படி, காரைக்காலில், ஒவ்வொரு மாதமும், 15ஆம் தேதி நடைபெற்று வரும் பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் இந்த மாதம் வரும் 17ஆம் தேதி நடைபெறும் என்று, காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் செயலர் திரு. வித்யாதரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டள்ள செய்திக் குறிப்பில், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் 17ஆம் தேதி காலை 9.30 மணி முதல், பகல் 12 மணி வரை, இந்த குறைதீர்ப்பு முகாம் நடைபெறும் என்றும், இதை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

-------------------------

சிவராஜ் பாட்டீல் (11)

மக்களவை முன்னாள் தலைவர் சிவராஜ் பாட்டீல், மஹாராஷ்ட்ர மாநிலம் லத்தூரில் இன்று காலமானார். அவருக்கு வயது 91. லத்தூர்

மக்களவை தொகுதியில் இருந்து 7 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், மத்திய உள்துறை அமைச்சர், பஞ்சாப், மற்றும், ராஜஸ்தான் மாநிலங்களின் ஆளுநர், மஹாராஷ்ட்ர சட்டப் பேரவைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். அவரது மறைவுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். சிவராஜ் பாட்டீல் மறைவுக்கு மக்களவையில் இன்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

-------------------------

*பரிசளிப்பு விழா* (8)

காரைக்கால் மாவட்டம் கீழையூர் அரசு தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், டி.ஆர் பட்டினம் காவல் நிலைய துணை ஆய்வாளர் திரு. முருகன் கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி உரையாற்றினார். அப்போது கல்வியின் அவசியம் குறித்தும், சுய தொழிலின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறினார். நிகழ்ச்சியில், அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. அரவிந்த் ராஜா பேசுகையில், சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தியதோடு, 103 மாணவர்களுக்கு உண்டியல் பரிசளித்தார்.

-------------------------

*வானிலை* (5)

கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 14ஆம் தேதி வரை, தென்தமிழகம், டெல்டா மாவட்டங்கள், மற்றும், காரைக்காலின் ஒருசில பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், ஏனைய தமிழக பகுதிகள், புதுச்சேரியில், வறண்ட வானிலையே நிலவக் கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மணிப்பூரின் வலிமை, அதன் பன்முகத் தன்மை, கலாச்சாரம், பாரம்பரியத்தில் உள்ளார்ந்து இருப்பதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

தனிநபர் நல்வாழ்வு, மற்றும், ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கு பொறுமையின் முக்கியத்துவத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவில், கடந்த 2015ஆம் ஆண்டிற்கு பிறகு காசநோய் பாதிப்பு 21 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார்.

சந்திரயான் 4 விண்கலன் வரும் 2027ஆம் ஆண்டுக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்று மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.